# யாழ்ப்பாணத்தில் மீண்டும் பாஸ்போட் அலுவலகம்

பக்கங்கள் எட்டு

விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 48 சனி 24-03-1990 (பங்குனி 11) ஷஃபான் 26

யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருதாகத் தெரியவருகின்றது. இத்திணைக்களம் முன்னர் யாழ்பழைய கச்சேரிக்கட்டடத்தில் இயங்கி வந்தது. அண்மைக்கால அசம்பாவிதங்களினாலேயே மேற்படி திணைக்களம் இங்கு மூடப்பட்டது. பழைய கச்சேரிக் கட்டடம் திருத்தப்பட்டு பழைய இடத்திலேயே இத்திணைக்களம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ் அலுவலகம் மூடப்பட்டதனால் வடபகுதிமக்கள் பாஸ்போட் பெறுவதற்கு கொழும்பையே நாடிவருகின்றார்கள். இதனால்பல சிரமங்களை எதிர்நோக்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக யாழ்மாவட்ட எம் பி திரு. சே நவரட்ணம் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் யோசனைகள் தெரிவித்துள்ளார். பாஸ்போட்வழங்கும்வேலைகளைத்துரிதப்படுத்த மாவட்ரீதியில் பன்முகப்படுத்த —8-ம்பக்கம் பார்க்க

# படை வாபஸ் இன்றோடு முடிவு

கடந்த முப்பத்திரண்டு மாதங்களாக இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் இன்றுடன் இலங்கையை விட்டு வெளியேறுகின்றனர். தற்போது திருமலை துறைமுக கிளபன்பேர்க் இறங்குதுறையில் தங்கியுள்ள சுமாரி ஆயிரம் இந்தியப்படை ஜவான்கள் இன்றுகாலை இந்தியா புறப்படவுள்ளனர். இந்தியப்படையின் கடைசி அணி இன்று புறப்படுவதை முன்னிட்டு வெளிநாட்டு உள்நாட்டு செய்தியாளர்கள் திருமலையில் குவிந்த வண்ணமுள்ளனர். இந்தியாவில் இருந்தும் செய்தியாளர்களை ஏற்றிக்கொண்டு விமானம் ஒன்று திருமலை வந்தள்ளது. இதேவேளை உள்ளூர் பத்திரிகையாளர்களும் இன்று திருமலை வந்து சேரவுள்ளனர். புறப்படவுள்ள இந்தியப்படையினரை வழியனுப்புவதற்கென —8-ம் பக்கம் பார்க்க

## பலம் வாய்ந்த இந்தியாவை விரட்டி அடித்துள்ளோம் -மாத்தயா

கடந்த17 வருடகால தமிழீழ விடுதலைப் போராட்ட வளர்ச்சியில் இன்று நாம் ஒரு பலம்வாய்ந்த இந்திய ஆக்கிரமிப்பு சக்தியினை இம் மண்ணிலிருந்து விரட்டி அடித்துள்ளோம் எந்த இலட்சியத்திற்காக போராடினோமோ அதிலிருந்து நாம் விலகப்போவதில்லை, எமது பலத்தின் அடிப்படையில் நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையினை நடத்துகின்றோம். அதில் உறுதியாகவுள்ளோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திர ராஜா மாத்தயா வியாழனன்று நடைபெற்ற வவுனியா கூட்டத்தில் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு என். தினேஸ் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார் திரு.மாத்தயா தனது உரையில் மேலும் கூறியதாவது;- என்ன இலட்சியமோ அதிலிருந்து நாம்தவறவில்லை.

நீண்டகால யுத்தத்தின் மத்தியில் கஷ்டப்பட்டு துன்பம் அடைந்த மக்களுக்கு அரசியல் தீர்வின் மூலம் நிம்மதியினைப் பெற்றுக் கொடுக்கவே விரும்புகின்றோம் என்றார்.

இக் கூட்டத்தில் கட்சியின் — 8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டு அரசினர் மருந்தகத்தில் மருந்துக்கு பணம் கேட்கிறார்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகிழடித்தீவு அரசினர் மருந்தகத்தில் கடமைபுரியும் டாக்டர் அங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு கொடுக்கும் மருந்திற்கு பணம் அறவிடுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது, அங்கு சிகிச்சைக்காக — 8 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய அரசிற்குப் படுதோல்வி - யோகி

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்று எம்மீது திணிக்கப்படதோ அன்றே இந்தியாவுடன் போராடுவதினை தவிர வேறு வழியில்லை என்று எங்களுக்கு தெரியும். இந்தியா-புலிகள் போர் தவிர்க்க முடியாதது ஒன்றாகும் இலங்கை ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்று நாம் இலங்கை அரசுடன் பேச்சவார்த்தையில் கலந்து கொண்டதின் மூலம் இந்தியா பெரிய இராஜதந்திர தோல்வியை அடைந்தது

இவ்வாறு புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி கடந்த புதன பிற்பகல் வவுனியாவில் நடைபெற்ற பகிரங்க கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்ட இவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது போராட்டத்தினை நாமே தான் போராடி வெல்ல வேண்டும் இன்னும் ஒருநாடு எமது சுதந்திரத்திற்காக போராட முடியாது அதன் மூலம் பெறுகின்ற சுதந்திரம் பூரணமான சுந்திரமாக — 8 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி பார்த்த சகுனம்

ஜனாதிபதி சகுனம் பார்த்து இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை மூடச்சொல்லியிருக்கலாம் என பாதுகாப்பு இணையமைச்சர் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் கூறினார், இஸ்ரேலிய நலன்காப்புப்பிரிவை மூட ஜனாதிபதி ஏன் இந்த நேரத்தை தேர்ந்தெடுத்தார் என்று நிருபர் ஒருவர் கேட்ட — 8 ஆம் பக்கம் பார்க்க

# படையை அழைத்தவர்களை கொண்டு அனுப்புகிறோம் -மாலினி

அமைதிப்படையை யார் அழைத்தார்களோ யாருக்காக யாரின் நலனுக்காக அவர்கள் வந்தார்களோ, அவர்களைக் கொண்டே இந்தியப் படையை வெளியேற்றிவித்தது எமது அரசியல் இராசதந்திரத்தின் அணுகுமுறையேயாகும், இதுவே ஸ்ரீ லங்கா அரசினதும் புலிகளினதும் பேச்சின் விளைவு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் மாறாக இது எமது போராட்டத்தின் தொய்வாக யாராவது கருதிவிடமுடியாது எமது போராட்டப் பரிமாணத்தின் வழிமுறைகளே.

இவ்வாறு நேற்று முன்தினம் நடேஸ்வராக்கல்லூரித் திறந்த வெளியரங்கில் திருமதி கருணாநந்தசிவத்தின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் —8 ஆம் பக்கம் பார்க்க

## அரசஊழியர் சைக்கிள் கடன்

அரசஊழியர்களுக்கென தற்போது வழங்கப்படும் சைக்கிள் கடன் உதவி இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது தற்போது ஆயிரத்தி இருநூற்றி ஐம்பது ரூபாவே சைக்கிள் கடன் தொகையாக வழங்கப்பட்டுவருகிறது.

உள்ளே

சினிமா தியேட்டர்கள் நேரடி றிப்போட்

3-ம் பக்கத்தில்

## நவீன கொம்பியூட்டர்கள் யாழ் செயலகத்திற்கு வரும்

(கொழும்பு)

யாழ் மாவட்ட செயலகத்திற்கு நவீன கொம்பியூட்டர்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

வெகுவிரைவில் யாழ் செயலக ஒய்வூதியக்கிளைக்கு கொம்பியூட்டர் வழங்கப்படவுள்ளது. இது இங்கு வந்துசேர்ந்தால் வழமையாக தாமதமாகிவரும் ஓய்வூதியக் கொடுப்பனவு வேலைகள் துரிதப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது கொழும்பிலேயே ஓய்வூதிய கொடுப்பனவு வேலைகள் கொம்பியூட்டர் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதனாலும் போக்குவரத்துக் காரணங்களினாலுமே ஒய்வூதியக்கொடுப்பனவு வேலைகள் தாமதமாகிவருகின்றது. இது விரைவில் நீங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது (03)

## வடகிழக்கு மாகாண சபையின் புதிய பதில் செயலாளர்கள்

வடக்கு கிழக்கு மாகாண சபைதொடர்ந்துஇயங்குவதற்காக புதிதாக பதில் செயலாளர்களை மாகாண ஆளுநர் நளின் செனிவரட்ன நியமித்துள்ளார். அதன் விபரம் வருமாறு:

கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக ஜே. சற்குணராஜா நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு செயலாளராக கே. பரமானந்தம்திட்டமிடல்இளைஞர்விவகார செயலாளராக கலாநிதி செல்வி ராஜரத்தினம் நிதி, சமூகசேவைகள் செயலாளராக கே.சோமஸ்கந்தர், காணி, விவசாய அமைச்சுசெயளலாளராக டாக்டர் என் விக்னராஜா, உணவு வர்த்தக கடல்தொ —8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டு தபால் அலுவலகங்களில் ஊழியர்கள் பற்றாக்குறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் அலுவலகங்களில் பொதுமக்கள் தமதுகருமங்களை முடித்துக்கொள்ள பல மணி நேரம்கியூவில் நிற்பதைக்காண முடிகிறது.

மூன்று அல்லது நான்குகருமபீடங்களுக்கு ஒரு ஊழியரே கடமை புரிகிறார் இ[illegible] — 8 ஆம் பக்கம் பார்க்க

யாழ் மாநகரசபை எல்லைக்குள்

## சைக்கிள் லைசென்ஸ் இல்லாத சைக்கிள்கள்மீது நடவடிக்கை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சைக்கிள் அனுமதிப்பத்திரம் எடுக்காதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] குதி மக்கள் சைக்கிள் அனும[illegible]திப்பத்திரம் பெறவில்லை. ஆனால் சென்றவருட இறுதியில் கட்டாயப்படுத்தியதனால் பலர் இவ்வனுமதிப்பத்திரத்தை பெற்றிருந்தனர்.

இவ்வருடம் 20.ஆயிரம்இலக்கத்தகடுகள் யாழ் மாநகர —8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1-வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் ரஜிந்தன்

பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த—ராஜமகேந்திரன் றங்கநாயகியின் செல்வப்புதல்வன் ரஜிந்தன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று சனிக்கிழமை (24. 3. 90) தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை குமரபுரம் நாதன்மாமா, கோண்டாவில் புலேந்தி மாமா, லீலாமாமி, பிள்ளைகள் கோண்டாவில் அப்பப்பா, அப்பம்மா, நீர்வேலி ரவி பெரியப்பா, பெரியம்மா, சுவிற்சலாந்து பெரியப்பா, பெரியம்மா, கோண்டாவில் சிறி பெரியப்பா, கனடாவரன் சித்தப்பா, சித்தி, கனடா குகன் சித்தப்பா, இவைரப்பல்லாண்டு காலம் எல்லாச் செல்வங்களும்பெற்றுவாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

03172


# வெளிவாரிப் பட்டப்படிப்புகள் 1990 / 91

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி B. A.
★ விஞ்ஞானமாணி B Sc.
★ வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி/நேரில் தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 31-3-1990**

**புதியபிரிவு விரிவுரைகள் 1.4.1990 ஆரம்பமாகின்றன**

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்,

**பட்டப்படிப்பு கல்லூரிகள்**

148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

03189



# கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming Course

**BASIC LANGUAGE**

வாரநாள் வகுப்புக்கள்

ஆரம்பம்: 28. 03. 90 — 9.30 A.M
29. 03. 90 — 1.30 P.M

வார இறுதிநாள் வகுப்புக்கள்

25. 3. 90 1.30 P.M

பயிற்சிக்காலம்—2 மாதங்கள்

**COBOL PROGRAMMING**

25 3. 90 1 30 A M

பயிற்சிக்காலம்—2 மாதங்கள்

O/L படித்த இருபாலாரும் சேரலாம் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

**North Ceylon Technical Institute**

14 ST. PETERS LANE
Hospital Road,
Jaffna

03141


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பின்வரும் 2 லொறிகளும் கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு (1) 24 Sri 6431 BMCலொறி (2) 24Sri 3251 BMC லொறி (3) Car 8 Sri 3174 மொறிஸ் ஒக்ஸ்போட் (4) Paper cutter24Inches தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி 53, K.K S. றோட், யாழ்ப்பாணம். 03177

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழு நேரப்பங்காளர் தேவை, விபரங்களுடன் எழுத்துமூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. 288 மே/பா முரசொலி யாழ்ப்பாணம் 03197

### தேவை

வெல்டிங், கேட் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை உடன் வரவும். நியூடீசன்ஸ்கேட்ஸ் வேக்ஸ் 23 பிள்ளையார் கோவில் லேன், முஸ். கல்லூரி வீதி. யாழ்ப்பாணம். 03195

## 'மகவம்'விருது ஒப்பனைக் கலைஞர் பெஞ்சமினுக்கு

ஈராண்டுக் காலத்திற்கு ஒருதடவை அருங்கலைத்துறை ஒன்றுக்கு வழங்கப்படும் மகவம் கௌரவ விருது 1988–1989 காலப்பகுதிக்கு ஒப்பற்ற ஒப்பனைக் கலைஞர் சாமுவேல் பெஞ்சமின் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இத்தெரிவு அண்மையில் ஊரெழு மதி அக்கடமியில் மகவம் தலைவர் வேல் அமுதன் தலைமையில் நடைபெற்ற இறுதித்தெரிவுக் குழுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

கௌரவவிருது ஏப்ரல் 14–ல் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

விருது வழங்கல் தொடர்பாக 'வைபவ நிறைவேற்றல் உபகுழு ஒன்றும் தெரிவானது இக்குழுவில், கலாநிதி. இ. பாலசுந்தரம் சமூகவியல் விரிவுரையாளர் என். சண்முகலிங்கன் க. வே. மகாதேவன், சட்டத்தரணி, கவிஞர் க. ஆனந்தராசா, வேல்அமுதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## துப்பரவற்ற நிலையில் பளை பொது மலகூடம்

பளை பொதுச் சந்தைக்கு மிகவும் அண்மையிலுள்ள பொது மலசல கூடம் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் அசுத்தமாக இருப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்.

இப்பொது மலசல கூடத்தைத் துப்பரவாக வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (43)

## கிளிநொச்சியில் இன்று

கிளிநொச்சி குமுளமுனை அ.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. கு. தோத்திரலிங்கம் தலைமையில் நடைபெறும். (43)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நவரட்ணம் லோகேஸ்வரி (தேவி)

| வையகத்தில் அறிமுகம் | தெய்வத்தில் சங்கமம் |
|---|---|
| 24-11-1963 | 24-02-1988 |

**திதி. 24. 03. 1990**

தாரணியில் வந்துதித்த நிலவே
தேயும் நிலவென்று எண்ணி நாம் பார்த்ததில்லை
நினையாத நேரம் அணைந்த எம் ஒளி விளக்கே
நினைக்காத நேரமும் இல்லை — உன்னை
வாழ வேண்டிய நேரத்தில்
வாழ்விழந்து போன தேவியே!
மரணம் நிச்சயமே மறக்கத்தான் முடியவில்லை—ஆனால்
தருணம் இதுவல்ல தவிக்கின்றோம் உன் பிரிவால்!
பண்பான வார்த்தைகளும் இளமைத் தோற்றமும்
கண்ணிறைந்து நிற்குதம்மா!
இதயங்கள் வெடிக்குதம்மா!
வேதனையால் வாடுகின்றோம்
கண்ணீரைக் கடல் ஆக்கி
காலமெல்லாம் கதறவைத்த
கல்லான கடவுள் இடம்
கதறித்தான் வேண்டுகின்றோம்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கேரதீவு வீதி,
தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

அன்பு, அப்பா, அம்மா, அண்ணன் தம்பி, அக்கா தங்கைகள், உறவினர், நண்பர்கள்.

03171


விஞ்ஞானக் கல்வி நிலையம்
கரடிப்போக்கு, கிளிநொச்சி
பதிவு இல: 12782

பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

# கல்வி ஆண்டு 1990/91

# கலைமாணி முதற்தேர்வு (G. A. Q.)

க. பொ. த. உயர்தர சித்தியுடன் பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்கள், அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், அண்மையில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி மூன்று பாடங்கள் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| சிறந்த நூலக வசதி | இலவச அச்சடித்த பாடக் குறிப்புக்கள் | சிறந்த ஒருங்கிணைந்த ஆசிரியர் சேவை |

இத்தனை வசதிகளுடனும்
**விரிவுரைகள்**
**ஆரம்பம்: 07. 04 . 90**
சனிக்கிழமை நண்பகல் 12 மணி

* பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினூடாகச் செய்து தரப்படும்.
* பதிவுகளுக்குரிய விண்ணப்பப்படிவம் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பெறவேண்டியிருப்பதால் உடன் பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.

விபரங்கட்கு
நிர்வாகி
03179


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப்படை வீரனே போறியோ? சேரியோ!

இந்தியப்படையின் இறுதிப் பிரிவு இன்று திருமலையிலிருந்து வாபஸ் பெறப்படுகின்றது.

கடந்த வருட இறுதியில் ஆரம்பமான படைவாபஸ் கட்டம்கட்டமாக இன்றுடன் முடிவடைகிறது.

1987 ஜூலை 29-ல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியப்படையினர் இலங்கையில் கால்வைத்தனர்.

ஒக்டோபர் 10-ல் முரசொலி, ஈழமுரசு பத்திரிகைக் காரியாலயங்கள்மீது இந்தியப் படையினர் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து மோதல்கள் ஆரம்பமாயின.

அதுவரையும் அமைதிப்படை என்று அழைக்கப்பட்ட ஜவான்கள் இந்தியப்படை என்று அழைக்கப்பட்டனர்.

இந்தியப்படைகள் வந்தபோது தமிழர்களை அவர்கள் காப்பதற்காகவே வருகின்றனர் என்று சொல்லப்பட்டது.

அதை நம்பித் தமிழ் மக்களும் வெள்ளைக் கொடிகளைக் கட்டி வரவேற்றனர்.

அன்று கட்டியவெள்ளைக் கொடிகள் இன்றும் சில இடங்களில் காணப்படுகின்றன. எப்படி?...

இந்தியப்படையினரால் தமிழ் மக்கள் அகதிகளாக வெய்யிலில் அலைந்து, மழையில் நனைந்து, காற்றில் உலர்ந்து, கிழிந்த வாழையிலையாக மாறினர்.

அதேபோன்று அன்று படையினரை வரவேற்பதற்காக நாம் உயரக் கட்டிய வெள்ளைக் கொடியும் தமிழ் மக்களின் நிலையை எடுத்துக் கூறுவதுபோல் கரும்பன் பிடித்துக் கறுத்துக் காணப்படுகின்றது.

இரு வருடங்களில் அமைதிப்படையானது வெறும் இந்தியப்படைதான் என்று தமிழ் மக்களுக்கு உணர்த்தப்பட்டது.

சிங்கள மக்களுக்கு அது ஆக்கிரமிப்புப் படை என்று உணர்த்தப்பட்டது.

இதனால் தென்னிலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல. இலங்கையே சுடுகாடானது.

அன்று வந்த [அனுமான்] சிறு குரங்கு இத்தீவைத்தான் தீ வைத்தான்.

ஆனால் கடந்த இரு வருடங்களுக்குமுன் வந்தவர்களால் சிதைக்குமல்லவா தீ வைக்கப்பட்டுவிட்டது

இந்தியப்படை இலங்கைக்கு வந்தபோது பலவித காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

அண்மையில் முன்னாள் இந்தியத் தூதுவர் டிக்ஸிற் உண்மையான காரணம் என்னவென்பதைக் காட்டிவிட்டார்.

அமைதிப்படை என்ற தோலுரித்து, அது இந்திய ஆக்கிரமிப்புப்படை என்பதைக் காட்டிவிட்டார்.

இந்தியா தனது நலன்களுக்காகவே இலங்கை வந்தது என்பதைத் தெளிவாக அவர் விளக்கியுள்ளார்.

அன்று படை வருகையின்போது ''இலங்கையில் உள்ள தமிழ், சிங்கள இன மக்களுக்கிடையில் உள்ள எதிர்ப்புணர்வைக் குறைக்கவே படையினர் இலங்கை வந்தனர்'' என்று இந்தியத் தரப்பில் கூறப்பட்டது.

அது ஒருவகையில் உண்மைபோல் தெரிகிறது. இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியப்படையைவிட இலங்கைப் படை (அட்டகாசத்தில்) பரவாயில்லை என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

இயக்கங்களைப் பொறுத்தவரை சாட்சிக்காரனை விட சண்டைக்காரன் மேல் என்ற நிலை உருவாகியுள்ளது.

தமிழ் மக்கள் இந்தியப்படை வந்தபோது வழங்கிய வரவேற்பு, போகும்போது வழியனுப்புதல் மூலம் காட்டவில்லை என்பது இங்கு முக்கியம்.

''போய்வாருங்கள்'' என்று எவரும் வழியனுப்பவில்லை. அவர்களும் ''போய்வருகிறோம்'' என்று கூறவில்லை. ''போகிறோம்'' என்றே கூறி விடைபெறுகின்றனர்.

## இதயநாதம்

சனிக்கிழமை 24-03-1990

நல்வாக்கு

உண்மையான தேசபக்தி என்பது எதற்கும் அயல் நாடுகளை நம்பியிருக்கக் கூடாது என்பதாகும்.
-விவேகானந்தர்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

★ திரை அரங்குகளுக்குள் நமது நிருபர் விசிட் (1)

# வடக்கு கிழக்கில் உள்ள ஒரே பொழுதுபோக்கு சினிமா

# ஆனால் சினிமா தியேட்டர்களுக்கு சென்றாலோ.......

நேரம் 10 மணி திரையரங்கு ஒன்றிற்குள் நுழைகின்றோம். ''தும்முது .. எண்டு... சொல்லுறன் ... சொல்லச் சொல்ல கேட்காம சிகரெட் புகைக்கிறீங்களே ... உங்களுக்கு மனசே இல்லையா ... வேதனையோடு படம் பார்க்க வந்த ஒருவர் சொல்கிறார்.

அவரைக் கோபத்தோடு பார்த்தவாறு சாறம் அணிந்த இளைஞன்...நான் என்ர காசில வாங்கிக் குடிக்கிறன்... உமக்கு தொந்தரவு எண்டா வேறெங்கையாவது போய் இருந்து படம் பாரும்...என்கிறார்.

இந்தக்காலத்தில யாரோடும் கதைக்க முடியிதில்ல... எதைச் சொன்னாலும்... என்று முணுமுணுத்தவாறு ஆசனத்தை விட்டு எழுந்து வெளியே செல்கிறார் அந்தத் தும்மல் மனிதர்.

அந்த மனிதரை படம் பார்க்க வந்த சிலர் வேதனையோடு நோக்குகின்றனர். கருத்து எதுவும் அவர்கள் சொல்லவே இல்லை.

திரையரங்கிற்குள் புகைக்கக் கூடாது என்ற அறிவுறுத்தல்கள் காணப்படுகின்றன. இந்த அறிவுறுத்தல்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே போய்விடுகிறன.

திரையரங்குதான் தமிழ் மக்களுக்கு பொழுது போக்குவதற்காக இருக்கின்ற ஒரே இடம். இந்த இடத்தில் புகைப்பதால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வெளிவருகின்ற சிகரெட் புகையையே சுவாசிக்கின்றார்கள் .. உலக சுகாதார தாபன புள்ளி விபரங்களின்படி புகைப்பவர்களிலும் பார்க்க அவர்கள் வெளிவிடுகின்ற புகையை சுவாசிப்பவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்ற உண்மை தெரிய வந்துள்ளது.

திரையரங்கிற்குள் புகைப்பவர்களுள் பெரும்பாலானவர்கள் 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் பலர் திரையரங்கை புகைத்துப் பழகும் இடமாகவே பாவித்து வருகின்றனர்.

கடந்த வாரம் திரையரங்கு ஒன்றில் சிகரெட்புகை அரங்கு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டதால் படம் பார்க்க வந்தவர்கள் பலர் சுவாசிக்க முடியாமல் திணறிய காட்சியைக் காணமுடிந்தது.

யாருமே புகைப்பதன் பாதிப்புப்பற்றி உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் வெறிச்சோடிக் கிடந்த திரையரங்குகள் இப்போது ரசிகர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன.

அன்று ஆண்கள் தொகைதான் திரையரங்கிற்குள் அதிகம். இன்று எதிர் மாறாக பெண்கள் தொகையே அதிகம். காலம் மாறிவிட்டது.

பாடசாலை மாணவர்கள் ரியூட்டரிகளுக்குச் செல்லும் மாணவர்கள் களவாக படம் பார்க்கச் செல்வதைத்தான் நாம் கடந்த காலங்களில் கண்டிருக்கின்றோம்.

ரியூட்டறிகளுக்கு வருகின்ற மாணவிகள் புத்தகங்களுடன் திரையரங்கிற்குள் தனியாகச் சென்ற காட்சிகளைக் காண முடியாது.

இப்போது 10.30 படக் காட்சிகளில் பெண்களே அதிகம். அதுவும் ரியூட்டறிகளுக்குச் செல்லும் பெண்களே அதிகம்.

**உதரன்**

கிழமைநாட்களில் காலை 10.30 மணிக்காட்சி காண்பிக்கப்படுவதால் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு 'கட்டடித்து' திரையரங்கிற்குள் நுழையத் தொடங்கி விட்டனர். சிறுவர்கள் பலர் திரையரங்கிற்குள் இருந்ததை எம்மால் காண முடிந்தது.

திரைப்படம் முடிந்து ரசிகர்கள் வெளியேறும்போது நாம் எப்படியான ரசிகர்கள் காலைக் காட்சிக்குப் போகிறார்கள் என்று நோக்கிக் கொண்டிருந்தோம்...,சில பாடசாலை மாணவர்கள் எல்லாகப் பக்கங்களையும் நோட்டம் விட்டவாறு அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் ..பாடசாலை மாணவர்கள் படம் பார்ப்பதை நிறுத்த வேண்டுமானால் 10-30க்கு காண்பிக்கப்படும் காட்சியை நிறுத்த வேண்டும். இல்லாவிடில் மாணவர்களுக்கு திரையரங்கினுள் நுழைய அனுமதிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்தால் மட்டும்தான் பாடசாலை மாணவர்கள் சீரழிவதைத் தடுத்து நிறுத்த முடியும் என்ற கருத்தை வெளியிட்டார்.

''ஒரு திரையரங்கில் '......' என்ற படம் ஓடிக் கொண்டிருந்தது நாமும் அரங்கில் அமர்ந்து விட்டோம்.

படம் ஆரம்பமாவதற்கு 10 நிமிடத்திற்கு முன் ஐந்து ஆறு பெண்கள் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். அவர்கள் சிறிதுநேரம் தமக்குள் உரையாடிச் சிரித்து மகிழ்ந்தனர். அதன்பின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த மூன்று வாலிபர்களைப் பார்த்துக் கேலிசெய்ய ஆரம்பித்தனர். முன்னுக்கு இருந்த வாலிபர் மூவரும் எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்தனர்.

## நேரடி றிப்போட்

கடந்த சில வருடங்களாக காதலர்கள் சுதந்திரமாகச் சந்தித்து உரையாட முடியாத நிலையில் இருந்தார்கள். இப்போது நிலைமைகள் வழமைக்குத்திரும்ப காதலர்கள் மனம்விட்டு உரையாட திரையரங்குகளுக்குச் செல்கின்றார்கள்.

தினம்தினம் திரையரங்குகள் சோடிகளால் நிறைந்து கொண்டிருக்கின்றன. காதல் சோடிகள் திரையரங்கிற்குள் இருந்தால் திரையரங்கில் அமர்ந்திருக்கும் வாலிபர்கள் அடிக்கடி காதல்சோடிகளையே திரும்பித் திரும்பிப் பார்பார்கள் இது நாகரிகம் என்று நினைக்கின்றார்களோ.. — அல்லது இவர்களுக்கு மனநோயோ தெரியவில்லை.

கொழும்பின் ஆங்கில, சிங்களப் படங்கள் காண்பிக்கப்படும் திரையரங்குகளுக்குள் நுழைந்தால் சோடிகளைத்தான் அதிகமாகக் காண முடியும். வாலிபர்கள் படம் பார்க்கச் சென்றால் அவர்களைத் திரும்பிப் பார்ப்பதில்லை. அதைப் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வதுமில்லை.

தமிழர்கள் கொழும்பில் உள்ள திரையரங்கிற்குள் சென்று விட்டால் சொல்லத் தேவையில்லை...... அடிக்கடி... திரும்பிப் பார்ப்பதைக் கொண்டே இவர்கள் தமிழர்கள் என்றே சுலபமாகச் சொல்லிவிடலாம்.

திரையரங்குகளுக்குச் செல்வது கிடைக்கின்ற ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்காகவே. ஆனால் திரையரங்குகளுக்குள் சென்றால் வேதனைமேல் வேதனையே

4-ஆம் பக்கம் பார்க்க

## கன்ரீனில் விலையேற்றம்

திரையரங்குகளுக்குள் இருக்கின்ற சில சிற்றுண்டிச் சாலைகளில் குளிர்பானங்கள், மற்றும் உணவுப் பொருட்களின் விலை, வெளியில் விற்கப்படும் விலையைவிட அதிகம். திரையில் காண்பிக்கப்படும் விலை ஒன்றாகவும், விற்கப்படும் விலை வேறொன்றாகவும் இருக்கின்றது.

## வயது வந்தோர் மட்டும்

இப்போது திரையரங்குச் சொந்தக்காரர்கள் படத்தைப் பார்ப்பவர்கள் தொகையைக் கூட்டுவதற்காக 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற வாசகத்தையும் படத்தைப் பற்றிய விளம்பரங்களில் சேர்த்துவிடுகின்றார்கள். படத்தைப் பார்த்தால் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற சொல்லுக்கும் படத்திற்கும் வெகுதூரம் என்பதை உணர்ந்து கொள்ள முடியும், சிறியவர் முதல் பெரியவர் வரை பார்க்கக் கூடிய நல்ல படங்களுக்குக் கூட 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற வாசகத்தைப் பயன்படுத்துகின்றார்கள் ...... ஏமாற்று பலவிதம்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய செய்திகள்

## கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்

கத்தோலிக்கமாணவர்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாகவும், சமயக் கல்விக்கு தேவையானவற்றை மாணவர் மூலம் அறிந்து அவர்கள் மூலமே செயற்படுத்துமுகமாகவும், வடமராட்சி மாணவரிடையேபுரிந்துணர்வை ஏற்படுத்துமுகமாகவும். கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சி கிளை வடமராட்சி கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் ஒன்றை அமைக்கவிருக்கின்றது. (18)

## க. பொ. த பரீட்சை முடிவு மீளாய்வு

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப்பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்ய விரும்பும் மாணவர்கள் 21ம் திகதி தொடக்கம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது (4)

## இலங்கை திருச்சபை வருடாந்த மாநாடு

இலங்கைத் திருச்சபை வாலிபர் சங்கத்தின் வருடாந்த மாநாடு பண்டாரவளை பரிசுத்த தோமா கல்லூரியில் ஏப்ரல் மாதம் 25-ம் திகதி தொடக்கம் 29-ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது. நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்பட்டிருப்பதாலும், போக்குவரத்து வசதிகள் திருப்திகரமாக இருப்பதாலும், இம் மகாநாட்டில் வடபகுதியைச் சேர்ந்த இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த வாலிபர்கள் பெருமளவில் இம் மகாநாட்டிற் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். (27)

## கட்டைக் காட்டில் மாணவர் மர நிழலில்

8-ம்ஆண்டு வரையுமுள்ள 250 வரையிலான மாணவர்கள் கல்விபயிலும் கட்டைக்காடு றோ. க தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற் போதிய கட்டிட வசதிகள் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் மர நிழலின் கீழிலிருந்து கல்வி பயில்கின்றனர். தற்பொழுதுள்ள பாடசாலைக் கட்டிடத்தின் கூரை பழுதடைந்துள்ளமையால் இடிந்துவிழும் நிலையில் உள்ளது. (18)

## நிர்வாகிகள்

முல்லைத்தீவு மகாவித்தியாலய அபிவிருத்திச் சபை நிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: வே. சுப்பிரமணியம்
செயளாளர்: எஸ்.இராசையா
பொருளர்: எஸ். செல்வவிக்னேஸ்வரன்

மற்றும் 19 நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர் (38)

## சனசமூக நிலைய சமாச உப குழுக்கள் தெரிவு

யாழ். மாநகரசபைப் பகுதிச் சனசமூக நிலையங்களின் சமாசம் இவ்வாண்டிற்கான செயற் திட்டங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்தும் முகமாக உப குழுக்களைத் தெரிவுசெய்துள்ளது. சமாசத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் தலைவர் கோ. தியாகராசா தலைமையில் நடைபெற்ற போது இந்த உப குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

கலை, கல்வி, கலா சாரக் குழு தலைவர்- கவிஞர் தேவதாசன், செயலாளர்- ரவீந்திர ராஜா, உறுப்பினர்- வ. தம்பையா.

சமூகப்பணிக்குழுத் தலைவர்- ரி. மைக்கல், செயலாளர்- எம். எஸ். ஏ காதர், உறுப்பினர்- ஜே. செபஸ்ரியன்.

விளையாட்டுக்குழுத்தலைவர்- எஸ். ரி. கணநாதன், செயலாளர்- க. நவரத்தினம், உறுப்பினர்- அ. கனகசபாபதி. நிர்வாக சீரமைப்புக் குழுத் தலைவர்- எஸ் யோகசிங்கம், செயலாளர்-கா. பீதாம்பரம்.(36)

## பெயரை மாற்றக் கோரிக்கை

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் உதவி அரசஅதிபர் பிரிவைச் சேர்ந்த இரு கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் இடப்பட்ட பெயர்களை மாற்றஞ் செய்யவேண்டும்என்றுகோரும் மகஜர் ஒன்றைக் கிறீன்பீல்ட் சனசமூக நிலையம் கூடாக அரச அதிபரைக் கோரியுள்ளது.

தற்போது குருநகர் கிழக்கு என வழங்கப்படும் கி. சே. உ. பிரிவினைக் கதிற்றல் மேற்கு கி. சே. உ. பிரிவெனவும், சுண்டிக்குளி மேற்கு எனப் பெயரிட்டு அழைக்கப்படுவதனைக் கதிற்றல் கிழக்கு என்று பெயரிடுமாறும் இப் பொது ஸ்தாபனங்கள் மேலும் வலியுறுத்திக் கேட்டுள்ளன. (45)

"M" Three Travel
வழங்கும் உடனடிப் பிரயாணம்
சவூதி அரேபியா, (Saudi Arabia)

| | |
|---|---|
| Electrician (High Voltage) | 750 S.R |
| Mechanic | 700 S. R |
| Fire Man | 750 S. R |
| Hospital Cleaners (பெண்கள் மட்டும்) | 475 S. R |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு நேர்முகப்பரீட்சை உண்டு.

★ நம்பிக்கை
★ நாணயம்

என்பவற்றிக்கு நீங்கள் நாட வேண்டிய தாபனம்
"M" THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
"இந்திர பவனம்"
சோதி வீதி
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

03186

### யாழ். பிரதிநிதிகளும் பங்குபற்றினர்

# கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் செயற்திட்ட உருவாக்கப் பயிற்சிப் பாசறை

இலங்கை மன்றக் கல்லூரி "செயற் திட்ட உருவாக்கம் என்ற கல்விப் பயிற்சி விரிவுரையினையும், தொழிற் கூட பயிற்சி போதனையினையும் இம் மாதம் 12-ம் திகதியிலிருந்து 16-ம் திகதிவரை கொழும்பில் நடாத்தியது.

சிங்கள – தமிழ் இரு மொழிகளிலும் நடைபெற்ற இக் கல்விப்பயிற்சி கருத்தரங்கில், இலங்கையின் பல தரப்பட்ட சமுதாய அபிவிருத்திகளில் ஈடுபடடுள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணத்தில் இருந்து 'சியூடெக்' மகளிர்அபிவிருத்தி நிலையம். போறாட் சனசமூக நிலையத்தின் பிரதிநிதிகளும் ஏன்ஞர், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் உட்பட பரந்த இடங்களிலிருந்து பல தரப்பட்ட சமூகத் தொண்டர் அமைப்புகளும், மாதர் சங்கங்களும், இளைஞர் பேரவைகளின் பிரதிநிதிகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

பங்குபற்றுநர் சமுதாய அபிவிருத்தி என்பதன் அர்த்தத்தினை விளங்கிக் கொள்ளுதல். சமுதாய அபிவிருத்தியில் ஈடுபடடுள்ளவர்களுக்கு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குதல். செயற் திட்ட உருவாக்கம் பற்றிய அறிவினை மேலும் விருத்தியடையச் செய்தல், பங்குபற்றுநர்க்கு சமுதாயத் தேவைகளைக் கண்டறியும் திறன், மூல வளங்களை அடையாளம் காணும்திறன் செயற்திட்ட உருவாக்கம் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல். என்பனவற்றை அடிப்படை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட இக் கருத்தரங்கில் இலங்கை மன்றக் கல்லூரி இயக்குநர் கலாநிதி டி. வெகும் பெரும கல்விப் பகுதி இணைப்பாளர் திரு. ஆர். ஸ்ரீசாந்தன் இலங்கை மன்றக் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஓ. ஆறுமுகம். உதவி விரிவுரையாளர் செல்வி சந்திரா குமாரசாமி ஆகியோர் பயிற்சியாளர்களாய்க் கலந்துகொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்கள்.

சமுதாய அபிவிருத்திக்கான அறிமுகமும், சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் திட்டமிடலின் முக்கியத்துவமும், மூலவளங்களை அடையாளம் காணல். சமூகத்தின் தேவைகளை அடையாளம் காணல். சுய வேலைவாய்ப்பும் ஏனைய வருமான உருவாக்கல் நடவடிக்கைகளும், செயற் திட்ட உருவாக்கம், செயற் திட்டமொன்றின் நிதி முகாமைத்துவம். செயற்திட்டம் ஒன்றினைக் கண்காணித்தலும் மதிப்பிடுதலும், என்பனவற்றின் அடிப்படையிலே செயற் திட்ட உருவாக்கத்தின் விரிவுரைகள் போதிக்கப்பட்டன.

இணைப்பதிகாரியும் - விரிவுரையாளருமான திரு. பீ. ஸ்ரீகாந்தன் இக் கருத்தரங்கு பற்றி தெரிவிக்கையில்; 'சமூக அபிவிருத்தியினை முக்கிய நோக்கமாகக் கொண்டு பங்கேற்றவர்களுக்கு போதிய அறிவினையும். அனுபவத்தினையும் இக் கருத்தரங்கு வழங்கியிருக்கும் என நம்புகின்றேன். இவ் விடயங்களை நிச்சயம் எல்லோரும் நடைமுறைப் படுத்துவார்கள் என்பது திண்ணம். சமூக அபிவிருத்தி என்பது பற்றிய எவ்வித அறிவோ அனுபவமோ இன்றி செயற்படமுற்படுவோமாயின் எமது எந்த ஒரு சமூக அபிவிருத்திக்கான செயற்திட்டமும் தோல்வியிலே போய் முடியும் என்றுகுறிப்பிட்டார்.

விரிவுரையாளர் திரு. ஆறுமுகம் கருத்துதெரிவிக்கையில்.

இத்தகைய செயற் திட்டங்களில் பயிற்சி பெற்றவர்களில் நூறுக்கு ஐம்பது வீதமானோர் தமது செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை நாம் நேரடியாகப் பார்வையிட்டும் அறிந்தும் உள்ளோம், தமிழ் பெண்கள் இத்தகைய கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு அதிகம் ஆர்வம் காட்டுகின்றார்கள்என்றாலும்... மேலும் அவர்கள் முன்வர வேண்டும். பால் ரீதியான வேறுபாடுகளைக் களைந்து திட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்

உதவி விரிவுரையாளர் செல்வி சந்திரா குமாரசாமி கருத்து தெரிவிக்கையில்;

இத்தகைய வளர்ந்தோர் கல்வித் திட்டத்தில் தமிழ்ப் பெண்களை விட சிங்களப் பெண்களே அதிகமாக ஆர்வமாக கலந்துகொள்கின்றனர், சமூகத் தடைகள் ஓரளவு காரணமாகஇருப்பினும் தமிழ் பெண்கள் முழுமையாக இக் கருத்தரங்குகளில கலந்து கொள்வது மட்டுமல்ல சுயமாகத் தானும் சமூக அபிவிருத்தியில் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்என்றார்

## குடமுழுக்கு

*(printed heading: கும்பாபிஷேகம்)*

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீ அஷ்டபுஜ துர்காதேவி அம்பிகைக்கு பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதன்பொருட்டு இன்று காலை 9 மணிக்கு யாகபூசை, ஹோமம் பூரணாகுதி' என்பனவும் மாலை யாகபூசை ஹோமம், விசேட திரவிய ஹோமம், பூரணகுதி என்பனவும் இடம் பெறும்.

### கண்டி ஆயர் எச்சரிக்கை

# சமாதானம் உருவாகாவிட்டால் பயங்கரம் மீண்டும் உண்டாகும்

(தலவாக்கலை)

"இன்று இந்த நாட்டில் அமைதிநிலை உருவாகிக் கொண்டுவருகின்றது. நம் மக்களிடையே அன்பும் சமாதானமும் ஏற்படாவிடில் கடந்த சில வருடங்களாக நிலவிய பயங்கரம் மீண்டும் நமது நாட்டில் உருவாகும்" என்று கண்டி மறைமாவட்ட ஆயர் அதி. வந். வியானி பெர்னாண்டோ ஆண்டகை எச்சரிக்கை செய்து உள்ளார்.

தலவாக்கலை புனித பத்திரிசியார் ஆலய வருடாந்த திருவிழாவில் கூட்டுத் திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுத்து விழாவை நிறைவேற்றி வைத்து கண்டி ஆயர் பேசினார். விழாவிற்கு வருகை தந்த ஆயரை தலவாக்கலை கத்தோலிக்க மக்கள், தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆலய வாசலில் வைத்து வரவேற்றார்கள்.

கண்டி ஆயர் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:-

"இன்று நமது நாடு அமைதிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் நடந்து முடிந்த பயங்கரத்தை மக்கள் மறந்து விட முடியாது. இப்பொழுது ஏற்பட்டுவரும் அமைதி நிரந்த அமைதியாக மாறவேண்டுமாயின் மக்கள் [illegible] நிலவவேண்டும். இவ்வாறான நிலைமை உருவாகாவிடில் நாட்டில் நடந்துமுடிந்த பயங்கரத்தை மீண்டும் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும் என்பதை மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"கண்டி மறை மாவட்டத்தில்63 ஆயிரம் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் வாழ்ந்து விட்டால் மட்டும் போதாது. மற்றவர்களுக்கு முன்மாதிரியாக கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து காட்ட வேண்டும்" இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டார்-

## பிரேமானந்தா கொழும்பில்

மாத்தளையில் வசித்துவந்த பிரேமானந்தா சுவாமி 1983 இல் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று; இரண்டரை வருஷங்களுக்குப் பின்பு, தற்போது இலங்கை திரும்பியுள்ளார்.

இவரது விஷேட நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனிலும்; 26ஆம் திகதி திங்கட்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும்? 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொட்டாஞ்சேனை விவேகானந்தசபை மண்டபத்திலும்; மாலை 5, 15 மணிக்கு நடைபெறவுள்ளது,

## வட கிழக்கில உள்ள ..

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

கிடைக்கும்

அமைதியாக இருந்து படம் பார்ப்பவர்கள் மிகவும் குறைவு. கூக்குரல் இட்டு, படத்தில் வரும் அடுத்த காட்சியை முற்கூட்டியே சொல்லித் தொந்தரவு செய்பவர்களால் படத்தை யதார்த்தமாக ரசிக்க முடிவதில்லை என்று ரசிகர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இது ஒரு புறம் இருக்க வீடியோ வந்ததால் திரையரங்கிற்கு ரசிகர்கள் வருவது குறைவாக இருக்கின்றது என்ற கருத்து நிலவுகின்றது. வீடியோவில் படத்தைப் பார்த்தாலும் திரையரங்கிற் படத்தைப் பார்த்துத் திருப்தி அடைவது போன்ற உணர்வு வீடியோவிற் படத்தைப் பார்ப்பதால் ஏற்படுவதில்லை.

வீடியோவிற் படத்தைப் பார்த்தாலும் ரசிகர்கள் திரையரங்கிற் பார்க்கவேண்டும் என்ற ஆவலிற்தான் இருக்கின்றார்கள். இதனால் திரையரங்குகட்கு வரும் ரசிகர்கள் தொகையிற் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறி விடமுடியாது.

இப்போது திரையரங்குகளிற்கலரி, இரண்டாம் வகுப்பு, முதலாம் வகுப்பு என்ற முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முன்வரிசை, பின்வரிசை என்ற இரண்டு பிரிவுகள் மட்டுமே உண்டு முன்வரிசையில் அமர 10 ரூபா, பின்வரிசையில் அமர 12ரூபா, பல்கனி உள்ள திரையரங்குகளிற் பல்கனிக்கு 14 ரூபா அறவிடப்படுகின்றது.

கலரியில் அமர்ந்திருந்து படம் பார்ப்போர் பாடு திண்டாட்டம்தான். இம் மாற்றம் பலருக்குத் தடுமாற்றத்தைத் கொடுத்துள்ளது.

எமது அலுவலகத்திற்கு வந்த கடிதம் ஒன்றில் அரை ரிக்கட் ரசிகர் ஒருவர் புதிய படங்களுக்கு அரைரிக்கட் கொடுப்பதில்லை. எம்மையும் வயதுவந்தவர்களாகவே கணிக்கின்றார்கள். ஆனால் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற படத்திற்குச் சென்றால் உனக்கு வயது காணாது என்கிறார்கள் இது எந்த வகையில் நியாயம் என்று வேதனையோடு எழுதியிருந்தார். அவரது கேள்வி நியாயமானதுதான்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காங்கேசன் முதல் – கோட்டை வரை

# தபால் ரயிலில் வைத்து தபால்கள் தரம் பிரிக்கப்படும்

காங்கேசன்துறை தபாலக ஒய்வு விடுதிலையவிட்டு இந்திய அமைதிப்படையினர் வெளியேறுவதையடுத்து இவ்விடுதி விரைவில் திருத்தப்படவுள்ளது

இத்தபால் விடுதி திருத்தியமைக்கப்பட்டவுடன் இரவு மெயிலில் தபால் பொதிகள் அனுப்பும் வேலைகள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது யாழ்ப்பாணம் வரைபட்டுமே தபால் பொதி யாழ்தேவி மூலம் அனுப்பப்பட்டுவருகின்றது.

இவ் விடுதி ஒழுங்குகள் சரிசெய்த பின்னர் இரவு ரெயிலில் தபால் அனுப்பப்படுவதோடு ரயிலில்வைத்து தரம் பிரிக்கும் வேலைகளுடன் இடம் பெறவுள்ளன. இதனால் அந்தப் பகுதிகளுக்கு தனித்தனியாக தபாற்பொதிகள் அனுப்பப்படும். தற்போது பிரதான நிலையங்களுக்கு மட்டுமே தபாற் பொதி அனுப்பப்பட்டுவருகின்றது காங்கேசன்துறைக்கு தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் மூலமே தபாற் பொதி அனுப்பிப்பட்டு வருகின்றது. (03)

# வடகிழக்கு இளைஞருக்கு அ.புரத்தில்ஹோட்டல்பயிற்சி

வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர்களை உல்லாசப் பயணத்துறை, ஹோட்டல் துறையில் பயிற்றுவிக்கும் முகமாக அநுராதபுரத்தில் ஹோட்டல் சேவையாளர் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படும்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தோடு ஹோட்டல் பயிற்சித்துறையில் பயின்றவர்கள் இலங்கையை விட்டுவெளியேறி விட்டனர். இதனால் இத்துறையில் பயிற்றப்பட்டோருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் உள்ளபதிவு செய்யப்பட்ட ஆயிரத்தி எண்ணூற்றி ஐப்பத்தெட்டு ஹோட்டல்களில் சேவையாற்ற வருடமொன்றுக்கு 700 முதல் ஆயிரம் பேர்வரை தேவைப்படுகிறது. எனினும் 300 பேரை மட்டுமே பயிற்றுவிக்கும் வசதி இட்போது உள்ளது இதன் பொருட்டே நான்கு புதிய பயிற்சி நிலையங்களை உருவாக்க உல்லாசபயண அமைச்சுதீர்மானித்துள்ளது.

கெயர் ஸ்தாபன உதவியுடன்

# யாழ்தொழில் நுட்ப நிறுவனத்தில் பல் தொழிற்பயிற்சிகள்

(பண்டத்தரிப்பு)

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் வட்டுக் கோட்டை யாழ்ப்பாண தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் பலவிதமான தொழிற் பயிற்சிகளை நடத்துகின்றது.

இன்றைய காலக்கட்டத்தில் கட்டங்களின் அமைப்பு புனர் நிர்மாண வேலைகட்கு மேசன் தச்சு வேலைகட்கு, தொழில் நுட்பம் தெரிந்த தொழிலாலர் பெருந் தட்டுப்பாடக உள்ளது

இப்பயிற்சிகள் வாலிபருக்கு வேலைவாய்ப்பையும் மக்களுக்கு விஞ்ஞான ரீதியான தொழிலாளர்களையும் வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ளது.

2½ மாதப் பயிற்சியை தொடர்ந்து பெற்று தமது தொழில் திறமையை வளர்பவர்களுக்கு மதாந்தம் 500 ரூபா சன்மானமும், பயிற்சியை பூரணப் படுத்து வோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் (37)

# மட்டக்களப்பு வீதி ஒழுங்கு விமானப்படையின் மீறல்

மட்டக்களப்பு வீதிப் போக்குவரத்து ஒழுங்கை இலங்கை பொலிஸார் மேற்கொண்டுள்ள போதும் அதனை மட்டக்களப்பு விமானப்படையினர் மீறிச் செல்வதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

செவ்வாயன்று மட்டக்களப்பு பிரதானவீதியில் சன நெருக்கமான பகுதியில் விமானப்படை வாகனத்தை விமானப்படையினர் நிறுத்திவைத்திருந்தனர். அதனை அப்புறப் படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்ட போதும் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை இதனால் அப்பகுதியில் வாகன நெருக்கடி ஏற்பட்டதால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை அனுபவித்தனர். (05)

# பாடசாலை மாணவர்களுக்கு புலிகளின் கருத்தரங்குகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பிரிவால் பாடசாலை மாணவர்களுக்கிடையான கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ரீதியில நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை, எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்ற கருத்தரங்கில் விடுதலைபுலிகளின் தீவக அரசியற் பிரிவு பொறுப்பாளர் திரு. வீ கஸ்ரோ கலந்துகொண்டு தமிழீழ போராட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பு, எமது தயாகம் காக்கப்படுவதில் மாணவர்களின் பங்களிப்பு, சாரணியம், விளையாட்டுத்துறைகள், கலைநிகழ்ச்சிகளில் மாணவர்களின் பங்களிப்பின் அவசியம் தற்போதைய போராட்டத்திற்கேற்ற சூழ்நிலையில் மாணவர்களது கல்வியை எடுத்துச் செல்லல் என்பன பற்றி கருத்துரை வழங்கினர். (24)

# மாணவருக்கு கல்வியோடு விளையாட்டுத்துறை அவசியம்

மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டுத் துறைகளிலும் முன்னணியில் திகழும் போது தான் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும், விளையாட்டுகள் மாணவர்கள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் தன்மை, சகிப்புத்தன்மை, நுண்மதி தேக ரோக்கியம் போன்ற பல்வேறு ஆற்றல்களை விருத்திசெய்கின்றது, எனவே மாணவர்களின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி மேம் பாடுகளில் அதிக அக்கறைஎடுக்கவேண்டும்

இவ்வாறு வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ. வீபரத்திரன் குறிப்பிட்டார். வைபவத்திற்கு நாகர் கோவில் கொத்தணி அதிபர் திரு. எஸ், பரமகுரு தலைமை தாங்கினர். பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்

இவ் விளையாட்டுப் போட்டி சிரேஷ்டபிரிவில் நாகர்கோவில் மகாவித்தியாலயம் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது 2ம் 3ம் இடங்களை முறையே செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. கனிஸ்ட பிரிவில் மாமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1ம் இடத்தையும், 2ம் இடத்தை செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் 3ம் இடத்தை யா/குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ கலவன் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு, வீரபத்திரன் வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் [illegible] களையும் வழங்கினார்.

# இலங்கையில் முதன் முதலாக இருதயபைபாஸ்சத்திர சிகிச்சை

இரண்டு கோடி ரூபா செலவில் முதன் முதலாக இலங்கையில் இருதய'பை பாஸ்' சத்திர சிகிச்சை பிரிவு ஒன்று கொழும்பு ஜெயவர்த்தன புர பெரியாஸ்பத்திரியில் அமைக்கப் படவுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதற்காக அமைக்கப்படவிருக்கும் விசேட பிரிவில் மேற் கூறப்பட்ட சத்திர சிகிச்சை பிரிவினை ஆரம்பிப்பதற்காக டாக்டர்களும், தாதிமார்களும்விரைவில் இலங்கை வரவுள்ளார்கள்

# அவசர காலநிலை மேலும் நீடிப்பு

அவசர காலச்சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கபட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள பதினருயிரம் நாசகாரச்சக்திகளின் மீது அரசு என்ன நிலைப்பாட்டை மேற் கொள்ளுவது என்பது குறித்து இன்னமும் தீர்மானம் ஏதும் எடுக்கபடாததினாலேயே அவசர காலச்சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப் படுவதாக பாதுகாப்பு இணைய மைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டத்தில் உள்ள சில விதிகள் விரைவில் நீக்கப்படும் என பாதுகாப்பு இணைய மைச்சர் அறிவித்துள்ளார். நீக்கப்படும் விதிகள் குறித்த விபரம் விரைவில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## விளையாட்டுச் செய்திகள்

### சங்கானை விளையாட்டு போட்டி

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் 54 புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது சுழிபுரம் விக்ரோறிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமை தாங்கினர்.

இப்போட்டியில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் 37 புள்ளிகளை பெற்று இரண்டாமிடத்தையும், நிலாவெளி விளையாட்டுக் கழகம் 15 புள்ளிகளைப் பெற்று மூன்ருமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக் கோட்டை விளையாட்டுக் கழகம் முதலாம்மிடத்தையும், உதைபந்தாட்டப்போட்டியில் இதே கழகம்முதலாமிடத்தை, யும் எல்லே போட்டியில் இதே கழகம் முதலாமிடத்தையும், வலைப் பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கழகம் முதலாமிடத்தையும் பெற்றன (13)

### சர்வதேசப்போட்டிகள்

நியூஸ்லாந்து கிரிக்கட் அணித்தலைவர் ரிச்சாட் ஹட்லிக்கு பரிசில் வழங்குமுகமாகவும் அவரை கௌரவிக்குமுகமாகவும் நான்கு சர்வதேச ஒரு நாள் போட்டிகள் நியூஸ்லாந்தில்இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகளில் நியூஸ்லாந்து அணி உலகதெரிவு அணியுடன் மோதும் நியூஸ்லாந்து அணிக்கு ரிச்சாட் ஹட்லி தலைமை தாங்குகின்ருர். மற்றயோர் விபரம் ஜோன்ரைற் மாட்டின்குறோவ், ஜபகுறோவ், இயன்சிமித், பிறேஸ்வெலி, மொறிசன். அன்ருஜோண்ஸ், கிறேற்பச், எம், கினடீன், எல் செயருஸ், எஸ்பொக், இயன் சட்பீல்ட, பிஸ்மக்வான்,

உலகத்தெரிவு அணியில் டி. ரன்ரன் (இங்) மைக்கல் கோல்டிங் எவ் ஸ்ரீபன்ஸன். ஏ. களிசரன் (மே இந்தியா) டெனிஸ் லில்லி கிரேக்மத்யூஸ் (அவுஸ்திரேலியா) சுனில் கவஸ்கர், கபில்தேவ் (இந்தியா) அப்துல் காதர் (பாகிஸ்த்தான்) அரவிந்தடிசில்வா (இலங்கை) எல். ஜேர்மொன் ஏ. பரோரர் (நியூஸ்லாந்து) ஆகியோர் இடம் பெறுகின்ருர்கள்.

இப்போட்டிகள் நாளை கிறிஸ்சேச்சிலும் 28ம் திகதி வெலிங்டனிலும் 31ம் திகதி ஹமில்ரனிலும் ஏப்ரல் 1ம்திகதி ஒக்லண்டிலும் இடம் பெறவுள்ளன.

### நல்லூரில் புத்தாண்டு விழா

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிங்கள –தமிழ் புத்தாண்டுத்தினத்தை யொட்டிவிசேட நிகழ்ச்சிகள் பல இடம் பெறவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

தாச்சி, கயிறு இழுத்தல், மென் பந்து, கிரிக்கெட், கவிதை, நாட்டுப்பாடல், புத்தாண்டு மங்கை தெரிவு ஆதியாம் பல்வேறு போட்டிகள் இத்தினத்தை யொட்டி நிகழவுள்ளன.

(40)

### வல்லை வி: கழகம் வெற்றி பெற்றது

விளையாட்டுத்துறை அமைச்சினல் நடாத்தப்படும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு: உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. முதல் அரையிறுதிப் போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை "5"க்கு "0" என்ற கோல் எண்ணிக்கையில் வென்றது. அடுத்த அரையிறுதிப் போட்டியில் மாரும் புலம் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை யூனைட்டட் விளையாட்டுக்கழகத்தை பளுட்டி உதையில் "5" க்கு "4" என்ற எண்ணிக்கையில் வென்றது. 4 :3 :90 ஞாயிற்றுக்கிழமை நடந்த இறுதிப் போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் மாரும் புலம் விளையாட்டுக்கழகத்தை "3" க்கு "0" கோல்க்கணக்கில் வென்று சாம்பியன் ஆனது.

இப் போட்டிகள் யாவும் வல்வெட்டித்துறை திருவில் விளையாட்டு மைதானத்தில் பெருந்திரளான பார்வையாளர் மத்தியில் நடைபெற்றது. (39)

### பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

வவுனியா தமிழ் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது இறுதி நேரத்தில் கடும் மழை காரணமாக பரிசளிப்பு விழா பிறிதொரு தினத்தில் நடத்துவதற்கு முடிவானது. [11)

### யாழ்வை. எம். சீ. ஏ. நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத்தின் நூற்றாண்டு விழாவை யொட்டி 50மைல் ஆண்கள் சயிக்கிள் ஓட்டப்போட்டி, பத்துமைல் பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி கரப்பந்தாட்டப்போட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி, உள்ளரங்கப் போட்டிகள் என்பன நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன (பாடசாலை மாணவர் மாணவிகளுக்கிடையே சித்திரப் போட்டி, மேலைத்தேய. கீழைத்தேய சங்கீதப் போட்டிகள் என்பனவும் நடைபெற இருக்கின்றன, போட்டியில் பங்கு பெற விரும்புவோர் செயலாளர் வை. எம் சீ. ஏ. யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறியும் படி கேட்கப்படுகின்றீர்கள்.

(27)

### கொழும்பு விவேகானந்தா வெற்றி

கொழும்பு விவேகானந்தாக் கல்லூரிக்கும் அமீடியால் ஹுசெனியா கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் விவேகானந்தா ஒரு இனிங்ஸ்சாலும் 143 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது இனிங்ஸில் விவேகானந்தா அணி 6 விக்கட் இழப்பிற்கு 332 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அமீடியால் ஹுசெனியா 87 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

உடற்கல்வி ஆசிரியர் ஜனாப் எம். சட், பாரூக் விவேகானந்தா மாணவர் அணிக்கு பயிற்சிகளை வழங்கி நெறிப் படுத்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழி அமுலாக்கம்; ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

''பெயர்ப் பலகைகள், தபால் தலைப்புகள் ஏனைய பத்திரங்கள் என்பன மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டும்.'' என ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் தேசிய மொழிக் கொள்கைக்கு அமைய நாட்டின் கல்விக் கொள்கை தயாரிக்கப் பட்டுள்ளது. ஊழியர்களைத் திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் சேர்ப்பது தொடர்பாக ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில், 'தகுதியடிப்படையில் இந்திய மனங்கள் வழங்கப்பட வேண்டும்' எனக் கூறினார்.

தேசிய மொழிக் கொள்கை பற்றி அவர் குறிப்பிடுகையில் ''சிங்களம் முதலாவது மொழி, தமிழ் இரண்டாவது மொழி. எனக் குறிப்பிட்டார்.

''பாடசாலைகளில் மூன்றுவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.'' என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## தமிழ் மொழி அமுலாக்கம் இங்கு இப்படி செயற்படுகிறது

வலி. தென்-மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து அதன் உப-அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் கடிதங்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களும் மற்றும் பிரதேசசபை அலுவலகங்களும் தங்கள் கடிதத் தொடர்புகளைத் தமிழ் மொழியிலேயே வைத்துக்கொள்ளவேண்டும் என்று கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் விடுத்திருந்த சுற்று நிருபத்திற்கிணங்க மேற்படி பிரதேசசபை அலுவலகம் செயல்படாதிருப்பது குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (13)

கொக்கிளாய் நாயாறு பகுதிகளில்

# மக்கள் விரைவாக மீள்குடியேற்றம்; வீதிகள் துரிதகதியில் திருத்தம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருவாட்டுக் கேணி, நாயாறு பகுதிகளில் மீண்டும் அப்பகுதி மக்கள் குடியேறி வருவதையடுத்து கொக்குளாய் முல்லைத்தீவுவீதி திருத்த வேலைகள் துரிதமடைகிறது.

நீண்டகாலமாக செப்பனிடப்படாத இப்பகுதி வீதி மக்களின் நலன் கருதி போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்தும் வகையில் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதான பொறியியலாளர் என். நகுலேஸ்வரனின் பணிப்பின் பேரில் வீதிகளின் இருபக்கமும் மண்டிக் கிடந்த பற்றைகள், காடுகளை துப்பரவு செய்யும் வேலைகள் முதலில் ஆரம்பித்துள்ளது.

மேற்படி வீதித்திருத்தத்தை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளில் பொறியியலாளர் திரு. ரி. செல்வரத்தினம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. வி. சிவனடியார் ஆகியோர் வீதித்திருத்த வேலைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (38)

# சிலப்பதிகாரம் தந்த கோவலன் வன்னியில் நாட்டுக்கூத்து

முல்லை நாட்டார் வழக்கியல் பாதுகாப்புக் கழக நிதிக்காக முல்லை அரச அதிகாரிகளும், ஆசிரியர்களும் வழங்கிய சிலப்பதிகாரம் தந்த கோவலன் நாட்டுக்கூத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்து மூன்று தினங்கள் நடைபெற்றது.

முதலாவது நிகழ்ச்சி முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி திறந்தவெளி அரங்கிலும் ஏனைய நிகழ்ச்சிகள் முறையே புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய முன்றல், முல்லைத்தீவு திறந்தவெளி அரங்கில் நடந்தன.

செல்லையா மெற்றுஸ்மயில் இந்த நிகழ்ச்சியினை தயாரித்து அளித்தார். இசை ஆட்டம் அமைப்பு ஏற்பாடுகளை அண்ணாவியார் வே. சுப்பிரமணியம் கவனித்திருந்தார்.

நாட்டுக்கூத்தில் கலந்து கொண்ட நடிகர்கள் அனைவரும் அரச ஊழியர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

## சுவையான செய்திகள்

### டாக்டர் எல்லாம் எமக்கேன்

பில் என்ற இந்திய மலைவாசிப் பழங்குடியினரிடம் இன்னும் சில மாறாத நம்பிக்கைகள் உள்ளன. இவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எந்த நோய் ஏற்பட்டாலும் டாக்டரிடம் செல்வதில்லை. அதற்குப் பதில் 'காட்டில் பாலாவி' என்ற மரத்தின் அடிப்பகுதியில் ஏற்பட்டிருக்கும் துவாரத்தில் குழந்தையை ஏழுமுறை திணித்து எடுக்கிறார்கள். இப்படிச்செய்தால் குழந்தையின் நோய் உடனே குணமாகிவிடும் என்ற நம்பிக்கையாம்.

### தாலி ஒன்று, இரண்டா?

வட நாட்டின் ஜாக்பாணிப் பகுதியில் ஒரு சிவன் கோவில் இருக்கின்றது. அண்மையில் இங்கு ஒரு பெண் இரண்டு மாப்பிள்ளைகளுடன் வந்து இருவருக்கும் தன்னைக் கல்யாணம் செய்து வைக்குமாறு பூசாரியைக்கேட்டுக் கொண்டாள். பூசாரி ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு பெண்ணிற்கு இரண்டு கணவர்களா என்று எதிர்த்தார், அதிர்ந்தார். சிறு வயதிலிருந்தே சேர்ந்து விளையாடியவர்களான இரண்டு மாப்பிள்ளைகளும் அதே பெண்ணை விரும்பி மணந்து கொள்ளத் தாங்களாகவே கல்யாண முறைகளைச் செய்து கொண்டு, பெண்ணிற்குத் தாலியையும் கட்டி நேபாளத்திற்குத் தேனிலவு கொண்டாடச் சேர்ந்தே புறப்பட்டு விட்டார்கள்!!

### குளிப்பதற்கு சோப் எதற்கு?

டேனியல் டேன்சர் என்பவரின் தந்தை ஒரு கஞ்சன். அவரது பாட்டனாரும் கஞ்சனே; அதனால் தானோ என்னவோ டேனியலும் கடைந்தெடுத்த கஞ்சமகாப் பிரபுவாக இருந்தார். இவர் தனது வாழ்க்கை முழுவதும் குளிக்கச் சோப்பையோ டவலையோ பயன்படுத்தவில்லை. நல்ல மணலையே உடலிற் தேய்த்துக் குளிப்பார். பிறகு அப்படியே வெய்யிலில் நின்று உடலை உலர்த்திக் கொள்வார்.

### உங்களுடையதா?

முல்லை - குமுளமுனையைச் சேர்ந்த குமாரசாமி தாமரைச் செல்வி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில், ஆசிரியபீடத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## முரசொலித்த வந்த கடிதம்

### சிறகிருந்தும் பறக்க முடியவில்லை

ஆசிரியர்
முரசொலி

இப்பொழுது மாணவர்கள், அதிலும் பார்க்க ஆசிரியர்கள் பாடசாலையைவிடத் தனியார் கல்வி நிறுவனங்களையே கூடுதலாக மதிக்கிறார்கள். நான் வடமராட்சியின் பிரபலபாடசாலையில் கல்விபயிலும் ஒருமாணவன். இப்பாடசாலையில் சில ஆசிரியர்கள் 'நீங்கள் ரியூட்டரியில் படித்திருப்பீர்கள் தானே, ஆகவே நான் வேறு பாடம் கற்பிக்கப்போகிறேன்' என்று வகுப்பறையில் சொல்லுகிறார்கள். ''சிலர், 'சேர்' கட்டுரை எழுதிவிடுங்கள், சொல்லித்தாருங்கள்'' என்றால் 'நீ ரியூட்டரியில் படிக்கிறாய் தானே நான், ஏன் எழுதி மினைக்கடவேண்டும்' என்று சொல்கிறார்கள் இப்படியாக இன்னும் பல விடயங்கள் உள்ளன. இதுபோன்ற செயல்கள் என்னைப்போன்ற மாணவர் சிலரின் மனதிற்கு பெரும் வேதனை தருகின்றன. இதனை அவர்கள் உணர்வார்களா?

பருத்தித்துறை, ஆர். பாஸ்கரன்

### பம்பைமடு மாணவர்க்கு 'குட்டிபஸ்' தரும்பெரும்தொல்லை

ஆசிரியர்
முரசொலி

வவுனியாவில் கல்வி கற்கும் மாணவர்களுக்காகத் தினமும்பிற்பகல் 3மணிக்கு பம்பை மடுவுக்கு வவுனியா டிப்போவினால் பாடசாலை பஸ் சேவை யொன்று நடாத்தப் படுகின்றது. பமபைமடு, வேப்பங் குளம், நெளுக்குளம், 4ம்கட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெரும் தொகையான மாணவர்கள் இந்த பஸ் சேவையையே நம்பியுள்ளனர். தற்போது இச் சேவைக்கு சிறிய 'குட்டிடஸ்' ஒன்றே விடப்படுகின்றது. மாணவர்களையே ஏற்றப் போதாத இந்தப்பஸ்ஸில் மேலதிகமாக இக் கிராமங்களுக்குச் செல்லும் ஏனைய பிரயாணிகளும் ஆடு,மாடுகளைப் போல் நெருக்கி ஏற்றப்படுகின்றார்கள். இதனால் சன நெரிசலில் பல மாணவர்கள் சுய நினைவிழக்கும் நிலையை அடிக்கடி அடைவதுடன் ஒருநாள் பாவித்த சீருடையை மறுநாள் பாவிக்க முடியாதவாறு பல சிரமங்களுக்கும் உள்ளாக வேண்டியுள்ளது எனவே இக்குறைபாட்டை நீக்க இப்பாடசாலைச்சேவைக்கு அதிகபயணிகளை ஏற்றக் கூடிய பெரிய பஸ் வண்டி யொன்றை விடுவதற்கு வவுனியா சாலை முகாமையாளர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இராசேந்திரம் குளம் பெ,ஜோர்ச்.

# பஸ் நிலையத்தில் திருடர் பயணிகளே கவனம்

யாழ். பஸ் நிலையத்தில் அதிகரித்து வரும் சன நெருக்கடியைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். நகைகள் அணிந்து செல்லும் பெண்கள் இப்பகுதியில் எச்சரிக்கையாக இருக்குமாறு கோரப்படுகின்றனர்.

சிலதினங்களுக்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்து நின்ற பெண்மணியொருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி பெண்மணிக்கு அருகில் நின்ற நபரொருவரினால் அறுக்கப்பட்டுப் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டது. பிரஸ்தாப பெண்மணி சுன்னாகம் செல்லுவதற்காகப் பஸ் நிலையத்தில் நின்றபோதே இந்த அதிர்ச்சிக்குள்ளானார்.

அண்மைக்காலமாக யாழ். பஸ் நிலையத்தில் திருடர் தொல்லை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது: (36)

## நெஸ்பிறே விலைகுறைப்பு

நெஸ்பிறே 400 கிராம் பக்கெட் பால் மாவின் விலை இன்று முதல் ஐந்து ரூபாவால் குறைக்கப் படடுள்ளது ஐம்பது ரூபாவிற்கு விற்கப்பட்ட 400 கிராம் பக்கெட்டின் புதிய விலை நாற்பத்தைந்து ரூபாவாக இருக்கும்

# தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் புனித அன்னையாக பூபதி

மானம் இழந்து இந்திய அமைதிப்படை வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் விடுதலைப்புலிகள் வீறுநடைபோட்டுக் கொண்டு வருகின்றார்கள் எனக் காந்தியத்தினைச் சேர்ந்த திரு. மகாதேவா வவுனியாவில் குறிப்பிட்டார்.

வவுனியா பஸ்நிலைய அருகாமையில் அன்னை பூபதிகணபதிப்பிள்ளையின் நிழற்படத்தினைத் திரைநீக்கம் செய்துவைக்கும் வைபவத்திற் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

[illegible] தேசப் பொறுப்பாளர் திரு. விஜயன் அன்னையின் படத்தினைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. மகாதேவா தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

தமிழ்ப் பேசும் மக்களின் புனித அன்னையாகப் பூபதி விளங்குகின்றார்: இவரது தியாகமும்சரி, விடுதலைப்புலிகளின் தியாகமும் சரி வீண் போகவில்லை.

வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்படத்தான் போகின்றது. 6-வது திருத்தச் சட்டம் நீக்கப்படவும் உள்ளது.

ஆசிரியர் ஜனாப் எஸ். ஏ. சமட் தனது உரையில்:-

வடக்கு- கிழக்கிற் போராட்டத்திற் பங்கு கொண்ட அனைத்து ஜீவன்களையும் இத் தருணத்தில் மறக்கமுடியாது. முக்கியதொரு தினமாக நாம் அனைவரும் அனுஷ்டிப்பது அவசியம் என்றார்.

திரு. விஜயன் தனது உரையில்:-

அன்னையின் தியாகப்பயணம் இன்னும் முற்றுப்பெறவில்லை என்றார்.

கூட்டத்திற்குத் திரு. கோ. நடேசபிள்ளை தலைமை வகித்தார். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நாள் எப்படி?

மேடம்: தொழில் உயர்வு, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: உடல்ரோகம், சகோதர வழியுதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

மிதுனம்: இராஜபயம், பொருள் நஷ்டம், வாகன மாற்றம், தூரத்துச்செய்தியால் நன்மை.

கடகம்: விவாக நிச்சயம், உயர் பதவி, வாக்கு வசீகரம், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

சிங்கம்: சத்துரு பயம், தெய்வ தரிசனம், தூரத்துப்பிரயாண நிறைவு, தடைப்பட்ட பண வரவு.

கன்னி: புத்திரசுகம், புகழ் தேடி வரும், வாகனசுகம், எண்ணியது நடக்கும்.

துலாம்: மாதா வழியுதவி, விவாகநிச்சயம், தேடியவர் வருகை, வணிகர்கள் இலாபம்.

விருச்சிகம்: புகழ் தேடிவரும், இளையசகோதரருதவி, தடைப்பட்ட பண வரவு, கடற்தொழில் மூலம் இலாபம்.

தனுசு: வாக்குப்பலிதம், காதலர் மகிழ்ச்சி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: மனக்கிலேசம், பண முடை, வாக்கு வசீகரம், தொழில் மாற்றம், தேடியவர் வருகை.

கும்பம்: திருடர் பயம், உயர் பதவி. உத்தமர்களுறவு, தூரத்துச்செய்தியாற் கவலை.

மீனம்: பண வரவு, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத்தொழில் செய்வோர் இலாபம், சுக ஜீவியம்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

# இன்றைய நிகழ்ச்சிகள்

## புங்குடுதீவில்

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி முத்து மாரியம்பாள் ஆலய இந்துக்கலாசார மண்டப முன்றலில் இன்று பிற்பகல் நடைபெறும். அதிபர் சு. யோ. பூராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராக வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் கலந்து கொள்ளுவார். (20)

## மருதனுமடத்தில்

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடாத்தும் சர்வதேச மகளிர் தினவிழா இன்று சனிக்கிழமை, மருதனுமடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மகளிர் குழுத்தலைவி திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான திருவாளர்கள் எஸ். ஐ நித்தியராஜ், எஸ். லிங்கநாதன், எஸ். சிவநாதன், தி. சபாரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வடகிழக்கு மாகாணகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. திருமதி. வேலாயுதம்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. சிவராசா அவர்கள் ஆரம்பித்து வைக்கும் இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (47)

## யாழ். நகரில்

யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையின் மகளிர். குழு நடாத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

விழாவை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி.சிவமகாராசா ஆரம்பித்து வைப்பார். கம்பன்கழக அமைப்பாளர் திரு இ.ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## நீராவியடியில்

யாழ்ப்பாணம் சிவானந்த குருகுலத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கடையிற் சாமி வீதியில் உள்ள அதன் அலுவலக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது, பேராசிரியர் சிவஸ்ரீ. க. கைலாசநாதக் குருக்களைத் தலைவராகக் கொண்டு நடைபெறும் கௌரவிப்பு விழாவில் கொழும்பு பொன்னம்பல வாணேஸ்வரர் கோவில் பிரதம குரு ஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் சேவை பாராட்டி உபசரிக்கப்படுவார்கள். விழாவுக்கானஏற்பாடுகளை குருகுல செயலாளர் சிவஸ்ரீ, நா, சர்வேஸ்வரக் குருக்கள் மேற்கொண்டு வருகிறார்கள். (30)

# வானொலியில் இன்று

24. 03. 90 சனி

காலை

5.05 தோத்திரமாலை- வெங்கடேஸ்வர சுப்பிரபாதம்

5.30 பாமாலை- சனீஸ்வரன் ஸ்தோத்திரம்

8.00 வாத்தியம்-ரவி,ரகு சகோதரர்கள்

8.15 தமிழ் மூலம் சிங்களம்-நடத்துபவர்:என். டீ பீரிஸ்

8.30 மாணவர் மன்றம்

பகல்

10.00 கல்வியரங்கம்

10.30 அறிவுச்சுடர்- தொகுப்பு: கே. எஸ்.பாலச்சந்திரன்

11 00 இசையமுதம்

11.30 ஓடி விளையாடு பாப்பா-நடத்துபவர் ரேலங்கி செல்லையா

11.45 அரங்கேற்றம்

மாலை

6.30 இசைப்பயிற்சி- நடத்துபவர்: ஏ. எஸ். நாராயணன்

6.45 நாட்டுப்பாடல்கள்

7 00 குன்றில் குரல்- தொகுப்பு:ஜோசப் ராஜேந்திரன்

இரவு

9.30 நாடகம்-"தூரத்துப்பச்சை"- எழுதியவர்:குயின்டஸ் ஜீவன்

10.00 இசைக்கச்சேரி- ஆர்.வி. செல்வராஜா

10.45 நினைவில் நிறைந்தவை

# பகைமை அகன்று நட்பு மலர பாரதம்- சீன விருப்பு!

(புதுடில்லி)

"பாரதத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள சீன ஆவலாயுள்ளது" என்று தற்போது புதுடில்லி விஜயம் மேற்கொண்டுள்ள சீன வெளிநாட்டமைச்சர் திரு சேன்சி சென் கூறியுள்ளார்.

"பாரத நாட்டுடன் இன்னமும் தீர்க்கப்படாமலேஇருந்து வரும் எல்லைப்பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படலாம்" என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வெளிநாட்டமைச்சர் திரு. இந்திரகுமார் குஜ்ரால் அளித்த அரச விருந்தொன்றில் பேசுகையில் திரு. சென் மேற்கண்டவாறு சொன்னார்.

"சமாதான சகவாழ்வின் ஐந்து கொள்கைகளைக் கொண்ட பஞ்சசீல நெறிகளின் அடிப்படையில் மேலும் சிறப்பான நல்ல அண்டை நாட்டு உறவுகளைப் பேணி வளர்த்துக் கொள்வதற்குப் பாரதத்துடன் ஒன்றுபட்டு ஒத்துழைப்பதற்கு சீன தயாராக இருக்கிறது" என்றார் அவர்

"தெற்காசியாவில் ஓர் மிகப் பெரும் நாடு என்ற வகையில் பாரதம் இப் பிராந்தியத்தில் அமைதியையும், அபிவிருத்தியையும் நிலைநாட்டச் செய்வதில் மிக முக்கியமான பங்குபணி ஒன்றை ஆற்ற வேண்டியுள்ளது"

"சீன-பாரத உறவுகளை மேலும் வளர்த்து வளம்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை, சீனவுக்கும் வேறு தெற்காசிய நாடுகளுக்கும் ஏற்கனவே இருந்து வரும் நட்புறவை எவ்வகையிலும் பிரதிகூலமான விதத்தில் பாதிக்கவே செய்யாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. குஜ்ரால் அங்கு பேசுகையில், "பாரத-சீன நட்புறவு கடந்த ஒரு சில வருடங்களில் பெருகி மேம்பட்டுள்ளன." என்றார்.

"சீனவுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள பாரதம் முனைப்புடன் செயற்படும்." என்றும் அவர் கூறினர்.

# 300வருட டென்மார்க் நாணயம்

(சென்னை)

தரங்கம் பாடியில் தனியார் ஒருவரிடமிருந்து முந்நூறு வருடங்களுக்கு முந்திய டென்மார்க் நாணயம் ஒன்றினை தொல் பொருள் ஆராய்ச்சித் துறை வாங்கியுள்ளது. இப் பகுதியை ஆட்சிசெய்து வந்த டென்மார்க் நாட்டினர் 1620 1845 வருட காலத்தில் 397 வகை நாணயங்களை புழக்கத்தில் விட்டிருந்தனர் தற்போது வாங்கப்பட்ட நாணயம் 5வது கிறிஸ்டியன் மன்னர் காலத்தில் பெயரிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

# பாக். எதிரணியினர் வெளி நடப்புச் செய்தனர்

பாகிஸ்தான் தேசிய சட்டப் பேரவையில் நேற்று முன் தினம் எதிர்க்கட்சியினர் சபையினின்றும் வெளிநடப்புச் செய்தார்கள்.

பாகிஸ்தான் குடியரசு தினத்தன்று லாகூரில் தாங்கள் நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்த பேரணியை நடத்தவிடாமல் சீர்குலைப்பதற்காகவே அரசு இக்கூட்டத் தொடரை அழைத்திருப்பதாகக் கூறி இதனை ஆட்சேபிக்கும் வகையில் அவர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.


# A/L 90
# மீட்டல் வகுப்புகள்

(1989-ம் ஆண்டுப் பரீட்சையில் தோற்றியோருக்கு)

## ஆரம்பமாகின்றன

பொருளியல் -திரு சின்னத்தம்பி
கணக்கியல்—திரு மரியதாஸ்
வர்த்தகம் —திரு தேவா

விபரங்களுக்கு:-

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட், கோண்டாவில்

03191



UNIVERSITY OF JAFFNA, CEYLON

## Tender for Uninterupted Power Supply System

Sealed TENDERS, along with detailed technical specifications and particulars of operational conditions and facilities of after sales service, are invited for the supply of uninterupted power supply system.

The specifications are given below:

| | | |
|---|---|---|
| Power Source | : | Single phase - 50 Hertz |
| Rating | : | Continuous 1 5/3 0/5.0/10 0 KVA at 240V, Sine wave |
| Cut Off Levels | ; | 200V (Lower) & 250 (Upper) |
| Operations | : | Normal A C/Battery D. C/By-Pass |
| Back up time | : | Not less than 10 minutes at full load and 30 minutes at 50% load preference will be given for higher back up time. |
| Indications | : | Distinctive Audio (Buzzer Aarm) and visual indications in case of malfunction/cut off stages/commercial power failure. Audio visual indications for input/output and battery charging Discharging |
| Additional | ; | Quotation shall detail Installation's |
| Requirements | ; | Enviromental Conditions/Physical Characteristics/Circuit Digrams/External Connectors/Voltage and Freq uency Regulations/Type of cooling. |
| Accessories | : | Batteries, Basic SERVICE Tools. |

Please send your sealed TENDERS in quadruplicate on or before 2.00 p m. on 06 04 1990 to THE BURSAR, University of Jaffna Jaffna and has the reference No.S/C/UUPS/01/1990 Please indicate Of the left hand corner of the envelope Tenders will be opened on the same day at 2 30 p.m.

Registrar.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முன்னணிவலிகாமம் பொறுப்பாளர் ஆஞ்சநேயர்

# 20-ம் நூற்றுண்டின் சகாப்தம் அன்னை பூபதி

(வலிகாமம்)

இருபதாம் நூற்றுண்டின் ஒரு சகாப்தமாக அன்னை பூபதி விளங்குகின்றூர், உலகில் உண்ணுவிரதமிருந்து தனதுபோராட்டம் நியாயமானது என்பதை நிரூபித்து, மரணித்து நியாயத்தை உலகின் முன் வைத்த முதலாவது பெண்மணி அவரே. இந்தவகையில் தமிழீழத்தை அடைய எமது பெண்கள் என்னவிலைகொடுக்கவும் தயாராக வுள்ளார்கள் என்பதை எமது போராட்டங்கள் வழியமைத்துள்ளன.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய புலிகளின் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயன் தெரிவித்தார்.

திருமதி. க. கருணைனந்தசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய புலிகளின் மாதர்பிரிவுத்தலைவி செல்வி மாலினி உரையாற்றுகையில் 'புலிகள் இன்று முழுப் பலம்பெற்று விளங்குகின்றூர்கள் ஆயுத, ஆள், ஆத்மீகபலத்துடன் சர்வதேச ஆதரவுப் பலத்தையும் பெற்றுள்ளதனுலேயே ஸ்ரீலங்கா அரசு எம்மை நிபந்தனையின்றிப் பேச்சுக்கு அழைத்தது. இதன் அர்த்தம் ஸ்ரீலங்கா அரசு எமதுபலத்தை உணர்ந்துள்ளது என்பதே என்றூர், திரு. கா. செல்வநாயகம், திரு த.இராசநாயகம், செல்வி அம்பலப்பிள்ளைதேவா ஆகியோரும் உரையாற்றினர்.

கூட்டத்தைத் தொடர்ந்து கலை கலாசாரப் பிரிவினரின் 'நடந்துவந்த பாதை' வில்லிசையும் 'விடிவைத்தேடி' நாடகமும் மேடைஏற்றப்பட்டது. (32)

## 87 வது கிரிக்கெட் போட்டி முதல் நாள்

## யாழ் மத்திய கல்லூரி 156 சென் ஜோன்ஸ் கல்லூரி 276

யாழ் சென்றல் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில, சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 87 வது கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் கல்லூரி அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி 4 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆரம்ப துடுப்பாட்ட வீரன் சுரேந்த்குமார் 135 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காமல் இருக்கிறூர். இன்று காலை 9 30க்கு இறுதி நாள் ஆட்டம் ஆரம்பமாகும் (16)

## கிளிநொச்சி சங்கங்களுக்கு காங்கேசன்துறையிலிருந்து மா

கிளிநொச்சி மாவட்ட ப. நோ. கூ. சங்கங்ளுக்கு இனிமேல் காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து மா, வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சிமாவட்ட பிரதிஉணவுக்கட்டுப்பாட்டாளரின்வேண்டு கோளுக்கிணங்கவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பரந்தனில் உள்ள உணவுக்களஞ்சியத்திற்குரயில் மூலமே மா கொண்டுவரப்பட்டுவருகின்றது இனி காங்கேசன்துறை உணவுக்களஞ்சியத்தில் இருந்து லொறிகள் மூலம் மா அனுப்பப்படும். (3)

## இன்று இவர்களுக்கு நிவாரணம்

யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளையில்செயலக உத்தியோகஸ்தர் கருமபீடங்களில் இன்றைய தினம் சாவகச்சேரி வடக்கு, மிருசுவில் பகுதிகளுக்கு 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நாளை 25ம் திகதி எழுதுமட்டுவாள் தெற்கு தாவளை இயற்றுலை, வரணி இயற்றுலை, நாவற் காடு, தனங்கிழப்பு, கோவிலாக்கண்டி மந்துவில் கொடிகாமம் 26ம் திகதி திங்கட்கிழமை மீசாலை தெற்கு பகுதிக்கும் வழங்கப்படவுள்ளது. (03)

### சைக்கிள்...

சபையினுல் தயாரிக்கப்பட்டுள்ளன. சைக்கிள்பாவனையாளர்கள் முன்கூட்டியே இதைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (03)

### மட்டுநகரில...

உரியவேளையில் தமதுகருமங்களை முடித்துகொள்ள முடியாது பொதுமக்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஜனசவிய திட்டத்தில் கொடுப்பனவுகளை பெறுபவர்கள் தமது பணத்தை வைப்புச் செய்வதற்கும் எடுப்பதற்கும் தபால் அலுவலகத்தில் பல மணிநேரம் கியூவில் நிற்க வேண்டியிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி தபால் திணைக்கள அதிகாரியிடம் கேட்டபோது மட்டக்களபு மாவட்டத்தில் 22 தபால்அதிபர் தரம் II வெற்றிடம் இருப்பதாகவும் மேற்படி தபால்அதிபர் நியமனகள் வழங்கப்படாமலேயே ஊழியர் பற்றுக்குறைக்கு காரணம் எனத் தெரிவித்தார், (5)

### ஜனுதிபதி...

போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்திருக்கின்றூர், ஜனுதிபதி நல்ல சகுனம் பார்த்திருக்கலாம் சனியும் தற்போது மாறுகிறதல்லவா எனவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன குறிப்பிட்டார்.

### இந்தியா...

இருக்காது இதனை பல தடவை நாம் இந்தியாவுக்கு கூறினேம்,

தார்மீக ஆதரவு தாருங்கள் உதவிசெய்யுங்கள் நேரடியாக வந்து தலையிடுவதினை நாம் விரும்பவில்லை என்றும் கூறினேம்,

எமது சுதந்திரமான தனித்துவப் போக்கை இந்தியா விரும்பவில்லை, விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக இருந்தது என்றூர். (11[

### யாழ்ப்பாணத்தில்...

வேண்டுமென்றும் கூடுதலான அதிகாரிகளையும் லிகிதர்களையும் இதற்குநியமித்து விரைவுபடுத்தவேண்டுமென்றும் ஒன்றுக்கு மேற்கட்ட பாஸ்போட் பெறுபவர்களை நவீனமுறையில் கண்டு பிடிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார், (03)

### பலம்வாய்ந்த...

செயலாளர் திரு, யோகரட்ணம் யோகி, வன்னிப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. ஆர். சந்திரன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரும் பேசினர்கள். (11)

### வட கிழக்கு...

மில்செயலாளராக எஸ். தில்லைநடராஜா, புனர்வாழ்வு அமைச்சுச்செயலாளராகஏ கே. பத்மநாதன்போக்குவரத்துசெயலாளலாளராகரி. மார்க்கண்டு சுகதார அமைச்சின்செயலாளராக டாக்டர் எம். இரத்தின சபாபதி.

### படையை...

கலந்து கொண்டு உரையாற்றிய புலிகளின் மகளிரணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் எமது மக்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும் நாம்எமதுபோராட்டத்தை எமது இலட்சியத்தை நசுக்கும் எவருடனும் நாம் யுத்த மொழியில் என்றுலென்ன சமாதான மொழியில் என்றுல் என்ன எம்மொழியிலும் சந்திக்கத் தயாராக பரிபூரண சக்தியுடன் இருக்கின்றேம் என்பதைத் தெளிவு படுத்த விரும்புகின்றேம் என்றூர், (32)

### மட்டு அரசினர்

செல்லும் நோயாளிகளிடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மருந்துகள் முடிவடைந்துவிட்டதாகக் கூறிதாம் வழங்குமமருந்துகளுக்கு பணம் தருமாறு கேடகப்படுகிறதாம்,

கடமை நேரத்தில் இவ்வாறு கட்டணம் அறவிடும் டாக்டரின் நடவடிக்கை குறித்து அப்பகுதிமக்கள் பட்டிப்பாறை உதவி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பட்டிப்பாறை உதவி அரசாங்க அதிபர் மேற்படி புகார் குறித்து விசாரணை நடத்துமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபரையும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரையும் கேட்ள்ளார்.

கடந்த 27-02 90 அன்று பட்டிப்பாறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் மேற்படி புகார் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது, (05)

முரசொலி அநுசரணையுடன்

## நல்லை ஆதீனம் நடாத்தும் இயல், இசை நாடகப் போட்டி

வெகு விரைவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடாத்தும் திருநெறிய தெய்வீக மகாநாட்டின் ஓர் சிறப்பம்சமாக "முரசொலி" நிறுவனத்தின் ஆதரவில் யாழ். பாடசாலைகளிடையே இயல், இசை, நாடகப் போட்டி நடாத்தப்படவுள்ளது. 'முரசொலி' நிறுவனம் முதலாம் பரிசாக ஆயிரம் ரூபாவையும், இரண்டாம் பரிசாக எழுநூற்றி ஐம்பது ரூபாவையும், மூன்றும் பரிசாக ஐந்நூறு ரூபாவையும் வழங்குகின்றது. இப் போட்டியில் பங்கேற்கும் பாடசாலை ஒவ்வொன்றும் 15-20 நிமிட சொற்பொழிவு, 30-35 நிமிட பண்ணிசை 30-35 நிமிட நாடகம்/நாட்டியம் ஆகியவற்றை மேடையேற்றவேண்டும். மூன்று நிகழ்ச்சிகளிலும் தனித்தனி கிடைக்கும் புள்ளிகளைக் கூட்டிப் பரிசுக்குரிய பாடசாலை தேர்ந்தெடுக்கப்படும். விடயங்கள் யாவும் சைவ சமய உயர்வை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் பங்கேற்கும் மாணவர்களின் உடை, உச்சரிப்பு, பேச்சினிமை, இசையறிவு, சைவசமய பண்பாட்டைக் காண்பிக்கும் திறமை ஆகியனவும் கவனத்தில் கொள்ளப்படும்: போட்டிகள் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்' விண்ணப்பங்கள் 28-05-90க்கு முன் ஆதீனத்திற்கு கிடைத்தல் வேண்டும்.

## முல்லைத்தீவு கிராமசேவகருக்கு கஷ்டபிரதேசஊக்குவிப்பு இல்லை

முல்லைத்தீவுமாவட்ட கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு இதுவரை கஷ்டப்பிரதேச ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவில்லை இப்பகுதியில்சில அரசதிணைக்களங்களுக்கு இப்பணம் வழங்கப்பட்டபோதிலும் பின்தங்கிய மாவட்ட மக்களின் வளர்ச்சிக்காக உழைக்கும் 127 கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு இப் பணம் வழங்கப்படாததால் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். (38)

## அலுவலகம் வேலணையில்

வேலணையில் பிரதேச சபையின் தலைமை அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக திரு, அருணுசலம் நியமிக்கப் பட்டுள்ளார்.

வேலணை, புங்குடுதீவு, நயினுதீவு அல்லைப்பிட்டி மண்டைதீவு ஆகிய உப அலுவலகங்களுக்கு இது தலைமை நிலையமாக விளங்குகின்றது (24)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு

## 1987ல் மா ஏற்றிய லொறிக் கூலி ப. நோ. கூ. சங்கங்களுக்கு இல்லை

1987ம் ஆண்டு ஜூன்மாதம் வவுனியாவில் இருந்து யாழ் மாவட்ட ப. நோ, கூ சங்கங்கள்மா ஏற்றியதற்கான போக்குவரத்துச் செலவு வழங்கப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளரே மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார். இது பற்றி ஏற்கனவே முரசொலியில் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்மாவட்ட ப. நோ, கூ சங்கங்களுக்கு சுமார் 4 லட்சம் ரூபா இதனுல் நிலுவையாக உள்ளது. அண்மையில் இப்பணத்தை வழங்கும்படி புனர்வாழ்வு அமைச்சை யாழ் மாவட்ட ப. நோ. கூ சங்கங்கள் கேட்டது தெரிந்ததே. (03)

### படைவாபஸ்...

இலங்கை அரசின் சார்பில் பாதுகாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவும் ஏனைய முக்கிய படைத்தளபதிகளும் இன்று திருமதி செல்கின்றனர.

இந்தியப்படைகள அனைத்தும் இன்றுடன் இலங்கையை விட்டு வெளியேறுவதை முன்னிட்டு நாடுமுழுவதும் மதவழிபாடுகளை நடாத்துமாறு கல்வி கலாசார அமைச்சு அறிவித்துள்ளது.


## மட்டுநகரில் முரசொலி

விற்பனை முகவர்கள் தேவை

முரசொலி பத்திரிகைக்கு பின்வரும் இடங்களுக்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனை முகவாகள் தேவை

★ வாழைச்சேனை

★ செங்கலடி

★ மட்டக்களப்பு

எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்

பொது முகாமையாளர்
முரசொலி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ 'இலக்கத்திலுள்ள அச்சகப்'பிரிவில் 24-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org